**சார்பு நீதிமன்றம், அரூர்**

**நாள் – 11.08.2025**

**OS.174/2020**

**வா.சா.1 திரு. செல்வம்**

**வா.சா.1 ஆஜர் சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டார்.**

**பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

1. எனது தாத்தா பெயர் என்ன என்றால் கொளந்தை கவுண்டர். அவர் பெயரில் எவ்வளவு சொத்து இருந்தது என்றால் 10 ஏக்கருக்கு பக்கமாக இருந்தது. அந்த 10 ஏக்கரில் எனது அப்பாவிற்கு எவ்வளவு பாகம் வந்தது என்றால் 3 ஏக்கர். அந்த சொத்து தற்போது யாரிடம் உள்ளது என்றால் அந்த சொத்தில் எனக்கு ஒன்றரை ஏக்கர் எனது அப்பா கிரையம் செய்து கொடுத்துவிட்டார். மீதி நிலம் யார் பெயரில் உள்ளது என்றால் அந்த நிலமும் என் பெயரில் தான் உள்ளது, அது எனக்கு பாகமாக வந்தது. அதற்கு ஏதாவது பாக பத்திரம் எழுதிக்கொண்டோமா என்றால் ஆமாம் பாகபத்திரம் எழுதிகொள்ளப்பட்டது. எப்பொழுது அவ்வாறு பாகபத்திரம் எழுதி கொள்ளப்பட்டது என்றால் தேதி தெரியவில்லை ஆனால் 15 வருடத்திற்கு முன்பு எழுதி கொள்ளப்பட்டது. அந்த பாகபிரிவினை பத்திரத்தை இந்த வழக்கில் தாக்கல் செய்யமுடியுமா என்றால் தாக்கல் செய்கிறேன். அந்த பாகபிரிவினை பத்திரத்தில் சேகருக்கு எந்த சொத்தும் கொடுக்கவில்லை என்றால் கொடுக்கப்பட்டுள்ளது, அவருக்கு பாகமாக ரூ.2,45,000/– கொடுத்துள்ளேன்.

2. எனது அப்பாவிற்கு பாகமாக வந்த 3 ஏக்கரில் எனக்கு ஒன்றரை ஏக்கர் எனது அப்பா கொடுத்ததால் தான் இந்த தாவா சொத்தை பிரதிவாதி சேகருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்வதுபோல பிரதிவாதிக்கு அவருக்கு பாகமாக எந்த வித பணமும் கொடக்கவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல எந்த விதமான பாகப்பிரிவினை பத்திரமும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. நான் வீடு கட்டியுள்ளேனா என்றால் கட்டியுள்ளேன். எப்பொழுது என்றால் கடந்த 5 வருடத்திற்கு முன்பு. எந்த சொத்தில் நான் வீடு கட்டியுள்ளேன் என்றால் என்னுடைய பாக சொத்தில் நான் வீடு கட்டியுள்ளேன். நான் பெற்றோரை விட்டு எவ்வளவு நாள் ஆகிறது என்றால் 10 வருடம் ஆகிறது.

3. நான் தனியாக சென்றுவிட்டபிறகு எனது அப்பா, அம்மா சேகருடன் தான் வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். எனது அப்பா, அம்மா தற்போது உயிருடன் இல்லை என்றால் சரிதான். அவர்கள் இறக்கும்வரை எனது தம்பியுடன் தான் இருந்தார்கள் என்றால் என்னுடனும் இருந்தார்கள். நான் தனியாக சென்றுவிட்டபிறகு எனது அப்பா, அம்மாவுடன் எனக்கு எந்த தொடர்ப்பும் இல்லை, அவர்கள் எனது தம்பியுடன் தான் இருந்தார்கள் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்தில் வீடு உள்ளதா என்றால் உள்ளது. அந்த வீடு யார் கட்டியது என்றால் எனது அம்மா கட்டியது. எனது அம்மா ஏதாவது வேலையில் இருந்தாரா என்றால இல்லை, எனது அப்பா கோவில் பூசாரியாக இருந்தார், கோவில் மானிய நிலம் 5 ஏக்கர் இருந்தது.

4. எனது தம்பி என்ன வேலை பார்க்கிறார் என்றால் நடத்துனராக உள்ளார். எனது தம்பி 2008ல் தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகத்தில் நடத்துனர் பணியில் சேர்ந்தார் என்றால் சரிதான். அதற்கு முன்பு எனது தம்பி தனியார் பேருந்தில் நடத்துனர் வேலை பார்த்தார் என்றால் சரிதான். எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் 2014. எனது தம்பிக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் தெரியவில்லை, ஆனால் எனக்கு திருமணம் நடந்த பிறகு 5 வருடம் கழித்து நடந்தது. எனது திருமணத்திற்கு முன்பே தனியாக சென்று விவசாயம் செய்ய ஆரம்பித்து விட்டேனா என்றால் இல்லை, திருமணத்திற்கு பிறகுதான். திருமணத்திற்கு பிறகு தான் எனக்கு பாகம் கொடுத்தார்கள் என்றால் சரிதான்.

5. தாவா சொத்தில் உள்ள வீடு 2012ல் கட்டடப்பட்ட வீடு என்றால் சரிதான். அவ்வாறு கட்டடப்பட்ட வீட்டிற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல, சம்மந்தம் உள்ளது. மேற்படி வீட்டில் நான் குடியிருக்கவில்லை, நான் தனியாக கட்டிய வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். வழக்கு சொத்தில் உள்ள வீட்டில் எனது தம்பி எனது அப்பா, அம்மா வசித்து வந்தார்கள் என்றால் சரிதான். சேகர் இருந்து வரும் வீட்டில் எனக்கு எந்த பாகமும் கிடையாது அந்த வீடான சேகர் நடத்துனராக பணியில் சேர்ந்து சம்பாதித்து கட்டிய வீடு என்றால் சரியல்ல. 2020ல் பழைய வீடு புனரமைத்து கட்டியது யார் என்றால் எனது அம்மா தான் கட்டினார். அந்த வீடு எத்தனை சதுரம் என்றால் 4 சதுரம். அந்த வீடு கட்டும்போது அந்த வீட்டில் எனக்கு ஏதும் பாகம் உள்ளது என்று

கேட்கவில்லை என்றால் எனது அம்மா வீடு கட்டியதால் அவ்வாறு நான் கேட்கவில்லை.

6. நான் தாவா சொத்தில் சொத்து விவரத்தில் சொல்லியுள்ள தார்சுவீடு எனது அம்மா கட்டியதாக என்னுடைய வழக்கில் எங்கும் சொல்லவில்லை என்றால் சரியல்ல, சொல்லியுள்ளேன். தற்போது அந்த வீட்டில் எனது தம்பியும், அவரது மனைவியும் வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்தில் எனக்கு ஏற்கனவே பாகம் ஒதுக்கப்பட்டது அதனால் எனது தந்தை பெயரில் உள்ள தாவா சொத்தை பிரதிவாதிக்கு பாகமாக ஒதுக்கிவிட்டார்கள் அதில் பாகம் கோர எவ்வித உரிமையும் எனக்கு இல்லை என்று சொன்னால் சரியல்ல. பாக தாவா தாக்கல் செய்தால் எனது அப்பா பெயரில் இருந்த அனைத்து சொத்துக்களையும் வழக்கு சொத்துக்களாக சேர்த்திருக்க வேண்டும் இந்த தாவா சொத்தை மட்டும் பாகம் கோருவது ஏற்புடையது அல்ல அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யக்கூடியது என்றால் சரியல்ல.

7. பூர்வீகமாக பாத்தியப்பட்ட சொத்து என்னிடம் இருப்பதால் அதில் பிரதிவாதிக்கு பாகம் கொடுக்கும் பட்சத்தில் தாவா சொத்தில் பிரதிவாதியும் எனக்கு பாகம் கொடுக்க தாயாராக உள்ளார் என்று சொன்னால் சரியல்ல. அனைத்து சொத்துக்களும் சேர்த்து இந்த வழக்கு தாக்கல் செய்யாததால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆகி நான் தனியாக சென்றுவிட்டேன் பின்னிட்டு எனது அப்பா, அம்மாவை பிரதிவாதி தான் பாதுகாத்து வந்தார் அதனால் தாவா சொத்தில் நான் பாகம் கோருவது ஏற்புடையது அல்ல என்றால் சரியல்ல,

எனது அப்பா, அம்மாவை நானும் தான் பார்த்துவந்தேன். எனது அம்மா 2013 ல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தை 2019 மல் இறந்துவிட்டார் என்றால் சரிதான். 2020 ல் தாவா சொத்தில் உள்ள வீடு கட்டப்பட்டது பிரதிவாதியால் கட்டப்பட்ட வீடு என்று சொன்னால் சரியல்ல, எனது அம்மாவால் கட்டப்பட்ட வீடு. நான் உண்மைக்கு மாறான தகவல்களை வைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் அதனால் இந்த வழக்கு தள்ளுபடி ஆகக்கூடியது என்றால் சரியல்ல.

R VIJAYAN

Digitally signed by R VIJAYAN
Date: 2025.08.11 11:50:54 +0530